விலை ரூபா 1-00 ★

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 24 ரவி ஆகிர் 11 இதழ் 355

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 6-2-82

# அமைச்சர் சிறில் மத்யூ காங்கேசன் துறை விஜயம்

(மாவிட்டபுரம்)

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்யூ நேற்றுப் பிற்பகல் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு விஜயம் செய்து பல்வேறு திட்டங்களையும் நேரில் பார்வையிட்டார்.

அமைச்சர் சிறில் மத்யூவை நேற்றுப்பிற்பகல் 2—30க்கு சிமெந்து தொழிற்சாலை பிரதான வாசலில் வைத்து சிமெந்து கூட்டுத்தாபனத்தலைவா திரு. அசோகா சோமரத்ன மாலை சூட்டி வரவேற்றார். சிறுமிகளின் நடனம் — நாதஸ்வரம் சகிதம் அமைச்சர் ஊர்வலமாக தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தொழிற்சாலை அலுவலகத்துக்கு அருகில் இலங்கை வங்கி கட்டடத்தை திறந்து வைத்த அமைச்சர் பின்னர் தொழிற்சாலையைச் சென்று பார்வையிட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை - இந்திய இணைப்பு நீடித்து நிலைக்கவேண்டும்!

## கண்டியில் பாரத ஜனாதிபதி

### "புத்தபெருமானின் போதனைகள் சமாதானம் சகிப்புத்தன்மையைக் கொண்டது"

(கண்டி)

"இலங்கையும் இந்தியாவும் நீண்டகால கலாசார, சமயத்தொடர்புகளைக் கொண்டுள்ளன. இப்பாரம்பரிய கலாசார, சமய இணைப்புகள் தொடர்ந்தும் நீடித்து நிலைக்கவேண்டும்."

ஸ்ரீதலதா மாளிகைக்கு நேற்று விஜயம்செய்த இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அங்கு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பாரதஜனாதிபதிதொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"நான் இங்கு யாத்திரிகனாகவே வந்துள்ளேன், இந்து மதமும், பௌத்தமதமும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன. இந்துமதத்தவர்கள் புத்த பெருமானை தமது அவதாரங்களில் ஒன்று என கருதுகிறார்கள். புத்தபிரானின் போதனை சமாதானத்தையும், சகிப்புத் தன்மையையும் அடிப்படையாகக்கொண்டது". என்றார்.

கண்டிதலதா மாளிகைக்கு விஜயம்செய்த இந்திய ஜனதி

(8-ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீகாந்தா காலமானார்



(யாழ்ப்பாணம்)

சிறந்த சமூக, சமயப்பணியாளரும் முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரும், காணி நீர்ப்பாசன அமைச்சின் முன்னாள்நிரந்தரச்செயலாளருமான திரு. எம். ஸ்ரீகாந்தா நேற்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

1913ம் ஆண்டு 9ம் மாதம் 17ம் திகதி அளவெட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. மயில்வாகனம் தம்பதிகளின் புத்திரராகப் பிறந்த திரு. ஸ்ரீகாந்தா அரசாங்கத் துறையில் பல்வேறு பதவிகளை வகித்தவர்.

தன் மக்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் பெற்றிருந்த ஸ்ரீகாந்தா முழங்காவில் பிள்ளையார் கோவில், உருத்திரபுரம் சிவன்கோவில், இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோயில் ஆசியவற்றின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியவர்.

யாழ்ப்பாணத்தில் பிரபல்யம்பெற்ற ஆயுர்வேத வைத்தியர் கஸ்தூரி முத்துக்குமாருவின் புத்திரியான மகேஸ்வரியை அவர் மணம் முடித்திருந்தார்.

பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றதையடுத்து இலங்கை நிர்வாக சேவையில் அவர் சேர்ந்தார். நாட்டின் பலபாகங்களிலும் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்தார். யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் விவசாயத் துறைக்கு அவர் ஆற்றிய பணியை இப்பிரதேச மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்

(8-ம் பக்கம் பார்க்க)

அரசியல்கட்சி அங்கீகாரம் கோரி

## தமிழர் சுயாட்சிக்கழகம் விண்ணப்பம்

(வண்ணார்பண்ணை)

அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கு கோரப்பட்டுள்ள விண்ணப்பங்களின் மீது இது காலவரை அரசாங்கத்தினால் பதியப்படாமல்இருந்த தமிழர் சுயாட்சிக்கழகம், அரசியல் கட்சியாக அரசாங்கத்தினால் அங்கீகரிப்பதற்கு விண்ணப்பித்துள்ளது.

முந்திய இரண்டு பொதுத் தேர்தல்களிலும் இக்கழகம் போட்டியிட்டபோது அங்கீகரிக்கப்படாமல் சுயேச்சையாகவே போட்டியிட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

1977ல் கழகம் பதிவுக்குவிண்ணப்பித்திருந்தும் தேர்தல் ஆணையாளரினால் இக்கட்சிஅங்கீகரிக்கப்படாமல் இருந்தது.

அரசாங்கத்தின் அரசியல் சாசனத்தை அங்கீகரிக்காத இயக்கமாகவே, இக்கழகம் இருக்கவேண்டுமென்றும், இதன் காரணமாக பதிவுக்கு விண்ணப்பிப்பதில்லை என்ற கருத்துமோதலும் ஏற்கனவே இக்கழகத்திற்குள் இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது. அங்கீகரிக்கப்படாத கட்சியாகஇருந்ததால், தேர்தல்களில் பதியப்பட்ட கட்சிகளுக்குரியசலுகைகள் இல்லாதிருந்தது. இக்கழகத்தின் வளர்ச்சிக்கு பெரும் குறைபாடாகஇருக்கிறதென்ற கருத்து இக் கழகத்திற்குள் வலுப்பெற்றதைத்தொடர்ந்து கழகம் பதிவுக்கு விண்ணப்பித்துள்ளதாக இக்கழகவட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன. பதிவுக்கான விண்ணப்பம் தமிழர் சுயாட்சிக்கழகபொதுச் செயலாளரினால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

கழகத்தலைவர் திரு. வ. நவரத்தினம், பொதுச்செயலாளர் செ. கோடீசுவரன், துணைச் செயலாளர் ந. ஸ்ரீகாந்தா ஆகியோர் அடங்கிய கழகக்குழு இது சம்பந்தமாக தேர்தல் ஆணையாளரைச் சந்திக்கவிருப்பதாகவும் தெரியவருகிறது.

1968ம்ஆண்டு தமிழர்சுயாட்

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைவாழ் இந்தியர்கள் உள்ளூர்மக்களுடன் இணைந்து வாழ வேண்டும்

-- பாரத ஜனாதிபதி

(கண்டி)

"இலங்கையில் வாழும் இந்திய இனத்தவர்கள் இலங்கையின் பொருளாதாரவளர்ச்சிக்கு உழைக்கும் பணி மகத்தானதாகும். இங்குள்ள இந்திய வம்சாவழியினர் தொடர்ந்தும் உள்ளூர் மக்களுடன்சேர்ந்து இலங்கையின் வளர்ச்சிக்கு தமது பங்களிப்பினைச் செய்ய வேண்டும்."

மேற்கண்டவாறு இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி தமக்கு கண்டி வாழ் இந்தியவம்சாவளி மக்கள் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் அளித்த வரவேற்பின்போது உரையாற்றுகையில் கூறினார்.

கண்டிக்கு விஜயம் செய்த இந்திய ஜனாதிபதியை கண்டி மாநகர்நுழைவாயிலில் வைத்து கண்டி மேயர் திரு. திலக்இரத்னாயக்காவும், மாநகரசபை உறுப்பினர்களும் வரவேற்றனர்.

பேராதனை தாவரவியல் பூங்காவிற்கு விஜயம் செய்த இந்திய ஜனாதிபதி திரு.ரெட்டி அங்கு மரக்கன்று ஒன்றையும் தனது விஜயத்தின் நினைவாக நாட்டி வைத்தார். (வெ)

## இந்திய ஜனாதிபதி கொழும்பு திரும்பினார்

(கொழும்பு)

அனுராதபுரம், கண்டிக்கு விஜயம் செய்திருந்த இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டியும் அவரது குழுவினரும் நேற்றுப் பிற்பகல் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இவர்களுடன் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தம்பதிகளும் நேற்றுகொழும்பு வந்தனர், (வெ)

OUT TODAY
SATURDAY REVIEW

### மணிவாக்கு

பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்.

ற

# நமது நோக்கு

## சித்த வைத்தியம்

யாழ்ப்பாணத்தின் மருத்துவ கல்விச் சரித்திரத்தின் ஒரு புது அத்தியாயம் இன்று திறபடுகின்றது.

திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுவரும் யாழ். பல்கலைக்கழகமருத்துவபீட கட்டிடம் இன்று திறக்கப்படுவதையே நாம் குறிக்கின்றோம்.

உயர்கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே பிரசன்னமாயிருக்கும் இச்சிறப்பு நிகழ்ச்சியில், அவருக்கும் அவருடைய பல்கலைக் கழக மான்யக்குழுவுக்கும், அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஆட்சியாளருக்கும், மருத்துவக் கல்வியில், சித்தவைத்திய முறைக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென வற்புறுத்துகின்றோம்.

அன்று ஆங்கில வைத்திய முறையின் அவசியத்தை உணர்ந்த அமெரிக்கன் மிஷனறி டாக்டர் எஸ். எவ். கிறீன், தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலவைத்தியத்தை போதிக்கும் பணியில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் ஒருநடமாடும் மருத்துவ பீடமாகத் தொண்டாற்றியது வரலாற்றில் இடம் பெற்றிருக்கிற .

சுதந்திர இலங்கையில் ஆராய்ச்சியில் வளர்ச்சி கண்ட ஆங்கிலவைத்தியத்துடன் சுதேசவைத்திய முறையும் வளர்க்கப்படவேண்டுமென்பது அரசின்கொள்கை சொள்கை மட்டுமல்ல; சுதேச வைத்திய முறைக்கு திட்டம் வகிப்பதற்கு ஒரு அமைச்சும் அமைந்திருக்கிறது. நாம் குறிப்பிடும் கோரிக்கை நேரடியாகஅந்த அமைச்சுக்குப்பொறுப்பான திரு. தர்மசேன ஆட்டிகலே அவர்களின் கவனத்துக்கு உரியது. இருந்தும் நாட்டின் ஜனாதிபதியின் தூண்டுதலின்றி எதுவும் நடைபெறாது.

சுதேச வைத்தியமுறையில் தமிழ்மக்களுக்குச் சிறப்புரிமையுடையது சித்த வைத்தியமுறை; இன்றும் ஏட்டில பூட்டிவைக்கப்பட்டிருக்கும்முறை இது; எத்தனை ஏடுகளுக்கு என்னென்ன நடந்ததோவென்று கவலைப்பட்டுக்கண்ணீர்வடித்து ஆவன செய்வதற்கு இன்று ஒரு ஆறுமுசநாவலர் எமத்தியில் இல்லை.

காரணகாரிய அடிப்படையில் அறநெறிக்கேற்ப அமைந்தது சைவசித்தாந்தம்; தேவார திருவாசகப் பாடல்களின் கிரசமே சைவசித்தாந்தம், ஏடுகளில் அல்லற்பட்டிருந்த இப்பாடல்களை திருமுறையாக அமைத்தபெருமை சோழ அரசன் ராஜராஜேஸ்வரனைச் சாரும்.

சைவசித்தாந்தம் முனிவர்கள் மகாவாக்கியம்; நிரூபிக்கப்பட்ட உண்மைகள்; அவ்வாறே சித்தர்கள் யோகிகள் கண்டவைத்திய முறை சித்தவைத்தியம்.

அண்மையில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மருத்துவ பீடத்தலைவர் பேராசிரியர் இ. கனகசுந்தரம் வெளியிட்ட கருத்து இவ்விடயத்தோடு சம்பந்தப்பட்ட அனைவரும் அவசியம் கவனத்திற் கொள்ளவேண்டியது.

சீனாவில் இருந்துவந்த 'அக்குபஞ்சர் வைத்தியம் இங்கு செயற்படுவதுபோல் சித்தவைத்தியமும் மிளிர வேண்டும், என்கிறார் பேராசிரியர் கனகசுந்தரம். வைத்திய ஏடுகள் யாவும் நூல்வடிவில் எழுதப்பட வேண்டும் ஆங்கில வைத்தியபீடத்துடன் இணைந்து செயற்படக்கூடிய வகைகளை அரசியல்தலைவர்கள் செய்துதரவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்.

இவ்விடயம் பற்றி அங்கும் இங்கும் அரசியல்வாதிகள் ஆசைவார்த்தை பேசுவது. செயலாற்றல் ஆகாது தீவிரநடவடிக்கைகளில் இறங்குவது மிக மிக அவசியம்.

பாகற்காய் நீரிழிவுக்கு 'அச்சா என்றும் இலைகுழை உணவு இருதயவியாதிகளுக்கு 'அசல்' எனவும் ஆங்கில வைத்திய நிபுணர் ஆராய்ச்சி முடிவுகட்டிவிட்டால் 'சித்தவைத்தியத்துக்கு' தொப்பிஎடுத்து அஞ்சலிசெய்யும் பேதைகள் இந்த ஆன்மிகவலிமை பெற்றமருத்துவ முறையைச் சீர்ப்படுத்தி, தொடர்ந்து ஆராய்சிசெய்வதை ஒரு அவசர அலுவலாகத் திட்டமிடுதலே சுதந்திர நாட்டின் தலையாய கடனாகும்.

## சிவதொண்டன் ஸ்ரீகாந்தா

மனித சமுதாயத்தில், அன்பு, அறிவு, இரக்கம், நீதி, தியாகம், 'தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலும் பெற்றிமை' முதலிய உயரிய பண்பு நலங்கள் அருகிப்போகின்றவனே எனக் கவலைகொள்ளும்வேளையில் உயர்திரு மயில்வாகனம் ஸ்ரீகாந்தாவின் சடுதிமறைவு பேரிடியாகவிருக்கின்றது.

மனிதன் திர்க்க இயலாத வகையில் பக்திஉணர்ச்சி (நோய்) உள்ளவனுகவே இருக்கின்றான் என அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

பக்தியே உருவெடுத்தாற்போல் சிவதொண்டின் சின்னமாக விளங்கிய பெரியார் பிற்காலத்தில் தவத்தின் இருப்பிடமாகத் தம்மை வளர்த்துக்கொண்டது பலர் அறிந்தவிடயம்.

மாணவகாலத்தில் தம்முடைய ஆசிரியருக்கு அநீதி விளைவித்ததன் காரணமாக கறுப்புக்கொடி பிடித்த மாணவ ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்கிய புரட்சி வீரன் என்பது பலருக்குத் தெரியாது.

மாணவ தலைவனாய், இந்திய சுதந்திரபேரபிமானியாய், நாட்டின் நிர்வாக சேவையில் (C. C. S.) உச்சஸ்தானமாகிய நிரந்தர காரியதரிசியாய் மிக அரிதான (O B E) கௌரவத்தைத் தேடிய அவர் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் என்றே பொதுமக்கள் இன்றும் நினைவுகூருகின்றனர்.

காரணம், கோயிலும் சுனையும் கிராமிய மக்களின் இருதயமாகக் கருதி காணி நிலமற்ற ஏழைகளுக்கு இத்துறையில் புனர்வாழ்வளித்த பெருமகன் என்பதே.

சாந்தம் உருவெடுத்தாற்போல் மக்கள் மனதை விட்டகலாத அன்பரின் அளப்பரிய சேவை அவர் நிறுவிய — நிறுவ முக்கிய கர்த்தாவாகவிருந்த — நல்லூர் ஆறுமுகநாவலர் சிலையைப்போல் என்றும் நிலைத்துநிற்கும்.

சிமெந்து தொழிற்சாலை

## தொழிலாளருக்கு வழங்கும் நன்கொடை அதிகரிப்பு

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை தொழிலாளர்கள் இளைப்பாறிச் செல்லும்போது அவர்களுக்கு தொழிற்சங்க மூலமாக வழங்கும் நன்கொடைப் பணத்தை, 500 பொவாக அதிகரிக்க சிமெந்து பொதுத் தொழிலாளர் சங்கம் முடிவு செய்துள்ளது

மேற்படிசங்கத்தின் பொதுக் கூட்டம் சங்கவளவில் நடைபெற்றபோது இம்முடிவு எடுக்கப்பட்டது.

தொழிற்சாலையிலிருந்து தொழிலாளர்கள் ஓய்வுபெற்று செல்லும்போது . தொழிற்சங்கத்தினுல் வழங்கப்பட்டுவந்த 200 ரூபா நன்கொடைப் பணத்தை இனிமேல் 500ரூபாவாக அதிகரிப்பதென முடிவு செய்யப்பட்டது.

தொழிற்சாலையில் தொழிலாளர் நலன் கருதி அமைக்கப்பட்ட இளைப்பாற்று நிதிச் சங்கம், சேமநலன் புரிச்சங்கம் என்பன செயலிழந்து இருப்பதால் அவற்றை புனரமைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அதன்மூலம் தொழிலாளர்களுக்கு நன்மைகிடைக்- உதவுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன தொழிலாளர் கஷ்டத்தை உணர்ந்து 5000 ரூபாவை அவர்களுக்கு வழங்குவதென எடுக்கப்பட்டமுடிவுக்கிணங்க உடனடியாக அப்பணம் கையளிக்கப்பட்டது.

## கூட்டுறவு கருத்தரங்கு

(மாவிட்டபுரம்)

போஷாக்கு, கூட்டுறவு ஆகியன தொடர்பான மகளிர் கருத்தரங்கு ஒன்று இன்று தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா தலைமையில் நடைபெற உள்ளது.

இக் கருத்தரங்கில் தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் திரு. மு. ஆலாலசுந்தரம், சிரேஷ்ட உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். ஜெயகாந்தன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள். (க)

## ஜீப் விபத்து

(மாவிட்டபுரம்)

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஜீப் வீதியை விட்டு விலகி விபத்தக்குள்ளானதில் ஜீப் வண்டி பலத்த சேதமடைந்தது. அதில்சென்ற பொலிசார் செய்வாதீனமாக சிறு காயங்களுடன் உயிர் தப்பினர்.

காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த பொலிஸ் கோஷ்டியொன்று இராணுவத்தினருடன் இணைந்து இரவு நேரத்தில் ரோந்திலீடுபட்டிருந்தபோது பொன்னாலை வீதியில் இவ்விபத்து இடம்பெற்றது.

பொலிசார் சென்ற ஜீப் வண்டி, வீதியைவிட்டு விலகி வயலினுள் குடைசாய்ந்து புதைந்தபோது அதிலிருந்த பொலிசார் அபயக்குரல் எழுப்பினர். உடனே இராணுவத்தினர் சென்று அவர்களைக் காப்பாற்றினர். விபத்து நடந்த சமயம் துப்பாக்கி ரவைகள் நிரப்பப்பட்ட நிலையில் துப்பாக்கிகள் பொலிசாரிடம் இருந்தபோதும் எதுவும் நடைபெறவில்லை.

பலத்த சேதமடைந்த ஜீப் வண்டி காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

## சிவராத்திரிக்குஇருதினங்கள் விடுமுறை வேண்டும்"

(புங்குடுதீவு)

''மகாசிவராத்திரி தினத்தன்று இரவு முழுவதும் இந்துக்கள் விழித்திருந்து விரதமனுட்டிப்பதோடு மறுநாள் காலையும் வழிபாட்டிலீடுபடுவது வழக்கம். சிவராத்திரி தினத்துக்கு மறுநாள் விடுதலை நாளாக இல்லாமையால் அரச, வர்த்தக நிறுவனங்களில் பணிபுரிவோரும், பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களும் இவ்விரதத்தை அனுட்டிப்பதில் பெரும் சிரமத்தை அனுபவிக்கிறார்கள். இரவு முழுக்க விழித்திருந்துவிட்டு மறுநாள் கடமையிலீடுபடுவது மிகவும் சிரமமென்பதையும் கடமைக்குச் செல்ல வேண்டியிருப்பதால் பகலில் வழிபாடு செய்ய முடியாது என்பதையும் கருத்திற்கொண்டு இந்துக்கள் பலர் இவ்விரதத்தைச் கைக்கொள்ளப் பின்நிற்கிறார்கள். இந்த துர்ப்பாக்கிய நிலையைப் போக்கு முகமாக சிவராத்திரிக்கு மறுநாளையும் விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்த அரசு முன்வர வேண்டும். எங்ஙனம் வெசாக் பண்டிகைக்காக இரண்டு தினங்கள் விடுமுறை அளிக்கப்படுகிறதோ அதேபோன்று சிவராத்திரிக்காகவும் இரண்டு தினங்கள் விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.''

இவ்வாறான மகஜர் ஒன்றை புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத் தலைவரான சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே, ஆர். ஜெயவர்த்தனுவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

தெல்லிப்பளை பாலஞானோதயசபை

## ஸ்தாபகர் தினம்

சீழமணித் திருநாட்டிலே, எழில்மிகு யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த சீர்மிகு தெல்லிமாநகரிலே, காசிப சோத்திர திலகரும், திரிபாஷா பண்டிதருமாக விளங்கிய முத்துக்குமார சுவாமிக் குருக்கள் என்னும் அந்தணப் பெருந்தகைக்கும், சிவகாமி அம்மையாருக்கும் விநாயகரது திருவருளால் இற்றைக்குத் தொண்ணூற்று இரண்டு ஆண்டுகளுக் முன் ஓர் புதல்வன் பிறந்தார். இவருக்குத் தாய் தந்தையர் இட்ட பெயர் சிவகடாக்ஷம் என்பதாகும். இவர் ஐந்தாம் வயதிலே வித்தியாரம்பம் செய்யப்பெற்று உள்ளூர்ப் பாடசாலையிலே கல்வி கற்றார். அதன்மேல் தகுந்த ஆசிரியர்கள் மூலம் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளையும் கற்று அவற்றில் தேர்ச்சி பெற்றார்.

தமது பதினெட்டாம் வயதிலே சேர். கனகசபை வித்தியாசாலை (பன்னாலை) யில் ஆசிரியப்பணியை மேற்கொண்டார். பன்னிரண்டு ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்த பின் தந்தையாரின் கட்டளைப்படி விநாயகருக்குப்பூசை செய்யும் பணியை மேற்கொண்டார். அந்நாளில் மாமன் மகளைத் திருமணஞ்செய்து கொண்டார். அடுத்த சில ஆண்டுகளில் இவருக்கு ஆசாரி அபிடேகமும் செய்யப்பட்டது. இவர்களது இல்லறத்தின் பயனாகக், கணேசலிங்க ஐயர் என்னும் புத்திரர் பிறந்தார். இவர் ஆசிரியப்பணி புரிந்தமைக்காக அரசினர் கொடுத்த உதவிப் பணத்தைக் கொண்டு காசி விநாயகருக்குக், கொடியேற்றுவதற்கு நாகமரத்தையும் கொடிமர அங்கிகளில் பெரும் பகுதியையும் செய்வித்தார்.

தனக்கெனவாழாத தனிப்பெருந்தகையானஇப்பெரியார் சைவச்சிறார்களுக்குச், சமய அறிவை விருத்தி செய்யும் நோக்குடன், வேறும் சைவப் பெரியார்களின் அனுசரணையுடன் 7—2—1946ல் ''பாலஞானோதய சபை'' என்னும் சபையை ஸ்தாபிதம் செய்தார். குறைந்ததொகை மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையானது பல்கிப்பெருகி பல நூற்றுக்கணக்கான மாணவர்களைக் கொண்ட ஸ்தாபனமாகத் திகழ்ந்தது. ஆலயத்தின் சுற்றுடலிலும் அயல் கிராமங்களிலும் உள்ள மாணவ மாணவியர் சமய அறிவையும் சமய ஒழுக்கத்தையும் பயின்று பயனடைந்தார்கள், வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் வகுப்புகள் நடாத்தப்பட்டன. ஆண்டு தோறும் தகுந்த பெரியார்கள் மூலம் பரீட்சைகள் நடாத்திப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

பல பெற்றோர்களின் வேண்டுகோளின் பிரகாரம் இசைக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. 6. 1. 65ல் வாய்ப்பாட்டு மிருதங்கம் ஆகிய வகுப்புகளும் 14. 3. 69ல் வயலின் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டன. இவ் வகுப்புகளில் இசை பயின்ற மாணவர்கள் வட இலங்கைச் சங்கீத சபைப், பரீட்சைகளுக்குத் தோற்றி ஆண்டுதோறும் பெருந்தொகையினர் சித்திபெற்று வருகின்றனர். ஐவர் ஆசிரிய தராதரம் பெற்றுள்ளனர். எழுவர் அரங்கேறியுள்ளனர். இன்று யாழ் நகரிலே சமயத் துறையும், இசைத்துறையும் வளர்க்கும் ஸ்தாபனங்களில் ஒன்று ''பாலர் ஞானோதய சபை'' என்று கூறின் அது மிகையாகாது.

ஸ்தாபகர் அவர்கள் 14.12.70ல் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். அன்னாரால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட இச்சபையானது அன்னாரது மகனாலும் மாணவராலும் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. முப்பத்தைந்தாவது ஆண்டுப் பூர்த்தி விழாவைக் கொண்டாடும் இவ்வேளையிலே ஸ்தாபகர் அவர்களை நினைவு கூராமல் இருக்கமுடியாது. பெப்ரவரி 7ந் திகதி ஸ்தாபகர் தினமாக நிர்ணயிக்கப்பட்டு ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இன்னும் பதினைந்து ஆண்டுகளில் பொன் விழாவையும் காண இருக்கின்றோம்.

ந. சிவபாலகணேசன்
செயலாளர் பா. ஞா. சபை
தெல்லிப்பழை

### மகாகும்பாபிஷேகம்


[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி வடக்கு அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் மகாகும்பாபிஷேகம் இன்று சனிக்கிழமை கொண்டாடப்படும். காலை சகஸ்ர சங்காபிஷேகமும், நண்பகல் அன்னதானமும், இரவு உற்சவமும் நடைபெறும்.

# யாழ். மருத்துவபீட கட்டடத் திறப்புவிழா சிறப்புமலர்



இன்றைய விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் **எவ். எஸ். சி. பி. கல்பகே**





பேராசிரியர் **சு. வித்தியானந்தன்**

## கட்டிடப்பணிகள் வளரட்டும்

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா வழங்கியிருக்கும் நல்லாசி:

யாழ்ப்பாண பல்கலைக்கழக வைத்தியபீட கட்டிடத் திறப்பு விழாவில் இக்கட்டிடத்தை குறிப்பிட்ட காலத்

(6ம் பக்கம் பார்க்க)

## இடையூறு மத்தியிலும் கட்டி முடித்தனர்



எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள நல்லாசி:—

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடக் கட்டிடத்தின் முதற் பகுதி பூர்த்தி செய்யப்பட்டுத் திறப்புவிழா நடைபெறும் செய்தி மகிழ்ச்சிதருவதாகும். இக்கட்டிடத்தை மிகக் குறைந்த காலத்தில் பல இடையூறுகளின் மத்தியிலும் கட்டி முடித்த ஒப்பந்தக்காரர் மனோகரன்—வெற்றிவேலுவின் ஒப்பரிய சேவையை உளமாரப் பாராட்டுகிறேன். தந்தை செல்வா நினைவாலய அமைப்பு விடயத்திலும் தமது ஆதாயம் முழுவதையும் தியாகம் செய்து அதை அமைத்துக் கொடுத்த பணியை என்றும் மறக்க முடியாது. மருத்துவபீடத்தின் இரண்டாவது மூன்றாவது அங்கங்களும் விரைவில் பூர்த்தியடையவும் மனோகரன் வெற்றிவேலுவின் சேவை சிறக்கவும் என் நல்வாழ்த்துக்கள்.

## சமுதாயப்பணி தொடரட்டும்

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் விடுத்திருக்கும் வாழ்த்துச்செய்தி:

மனோகரன் வெற்றிவேல் ஸ்தாபனத்தார் எமது இனத்திற்கு ஆற்றிவரும் சேவை அளப்பரியது. யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் ஓர் பகுதியை ஒன்றரைக் கோடி ரூபா செலவில் எத்தனையோ பணக் கஷ்டங்களுக்கு மத்தியிலும் அமைத்து முடித்தது எமது மாணவ சமுதாயத்திற்கு ஓர் வரப்பிரசாதமாகும். அவர்களது சமுதாயப்பணி மேலும் தொடர எனது நல்லாசிகள்.

### ஆதரவு நல்கிய அனைவருக்கும்

# நன்றி கூறுகின்றோம்!


''ஒன்றே குலம் ஒருவனே இறைவன்'' ''தர்மம் தலைகாக்கும்'' என்ற உயர்ந்த தத்துவங்களின் அடிப்படையில் நாடு, மொழி, இனம், சமயம் என்பன வற்றிற்கு அப்பால் எமக்காக நாமும் எம்மால் மக்களும் சிறப்புறக் கொண்ட கொள்கையின் மைல்கல்லினை அண்மித்து வந்துள்ளோம்.

நாம் அண்மித்திருக்கும் மைல் கல்லின் வெளிச்சமாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட முதல் தொகுதிக் கட்டிடம் காட்சி தருகின்றது. கட்டிடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜா அவர்களின் கைவண்ணத்தில் தீட்டப் பெற்ற மாதிரிப்படத்தினைக் கொண்டு 350 லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட கட்டிடத்தில் 150 லட்சம்ரூபா பெறுமதியான முதல் தொகுதிக்கட்டிடம் முடிக்கப்பெற்று இன்று திறக்கப்படவுள்ளது.


வருங்கால தலைவர்களான மாணவ மணிகளின் கல்வி வளர்ச்சிக்காக மருத்துவ பீட கட்டிடத்தினை பல தடைகளுக்கு மத்தியிலும் கட்டி முடித்தவர்கள் என்ற பெருமையுடன் மனோகரன் வெற்றிவேலு ஸ்தாபனத்தினராகிய நாம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கட்கும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே அவர்கட்கும் மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் ஆர். கனகசுந்தரம் அவர்கட்கும் பல்கலைக்கழக கவுன்சிலர் அனைவருக்கும் சிறப்பமுறையில் மாதிரிப் படம் வரைந்த நிபுணர், கட்டிடக்கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜா அவர்கட்கும், மற்றும் கட்டிட நிர்மாணத் திணைக்களத்தினர் மின்சாரப் பகுதியினர் பல்கலைக்கழக அதிகாரிகள் அனைவர்க்கும்மாணவ பேரவையினர் அனைவருக்கும் நன்றியுடையவர்களாயிருக்கின்றோம்.

எமது மனம்கனிந்த நன்

[6ம் பக்கம் பார்க்க]



கட்டடக் கலைஞர்
**வி. எஸ். துரைராஜா**





சு. கி. மனோகரபூபன் இ. வெற்றிவேலு
(முகாமைப் பங்காளர்கள்)

## தரமான கட்டிட நிபுணர்கள்

யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா விடுத்திருக்கும் வாழ்த்துச் செய்தி:—

''யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட திறப்புவிழாவை முன்னிட்டு இச்செய்தியை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். மருத்துவபீடத்தில் முதல் பகுதியை குறிப்பிட்ட காலப்பகுதியில் கட்டி முடித்

(6ம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தக்காரர் இலாபத்தை ஏற்க மறுப்பு

(நமது யாழ். நிருபர்)

தந்தை செல்வா நினைவாலயத்தை நிறுவித்தந்த மனோகரன்—வெற்றிவேல் கட்டிட ஒப்பந்தக்காரர்கள் இதன் மூலம் தமக்குக் கிடைக்கவிருந்த இலாபத் தொகையைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

மேற்படி நினைவாலய அமைப்பு வேலை ஒரு தரும நடவடிக்கையாதலால் அவர்கள் தமது இலாபத் தொகையான 64 ஆயிரத்து 777 ரூபா 34

(6ம் பக்கம் பார்க்க)

# "நன்றே செய் நன்றும் இன்றே செய்"

'நன்றே செய் நன்றும் இன்றே செய், என்ற முதுமொழிக்கிலக்கணமானவர்கள் மனோகரன் வெற்றிவேலு ஸ்தாபனத்தினர்.

தன் கடன் பணி செய்வதே என்ற குறிக்கோளிற் கிணங்க இரட்டையராகப் பிறக்க விட்டாலும் மக்களால் இரட்டையர்கள் என்று போற்றப்படும் — வாழ்த்துப்படும், ஒரே மனப்பாங்கின் பிரதிபலிப்பினால் இரட்டையர்களான திருவாளர்கள் மனோகரபூபன் வெற்றிவேலு ஆகிய

(6ம் பக்கம் பார்க்க)

## சிரமத்தின் மத்தியிலும் சீரிய பணி!

யாழ். மாவட்ட அமைச்சரும், தம்பதெனிய எம். பி.யுமான திரு. யு. பி. விஜேகோன் விடுத்த செய்தி:

மனோகரன் வெற்றிவேல் ஸ்தாபனத்தினர் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட கட்டிடத்தைக் கவினுறக் கட்டி முடித்தமை பாராட்டுக்கு உரியதொன்றாகும். மாணவ சமுதாயத்திற்கு மதிப்பளித்து அவர்களின் முன்னேற்றத்தை

(6ம் பக்கம் பார்க்க)

## செல்வா நினைவாலயத்துக்கு அன்பளிப்பு

[யாழ் குறூப் நிருபர்]

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் காலஞ்சென்ற தந்தை செல்வா நினைவாலயத்துக்கு மனோகரன், வெற்றிவேலு ஆகியோர் ரூபா 64,777 சதம் 34ஐ அன்பளிப்புச் செய்துள்ளனர்.

தர்ம ஸ்தாபனமாக அங்கீகரிக்கப்பட்ட தந்தை செல்வா அறங்காவல் குழுவினரால் நாலு இலட்சம் ரூபா பெறுமதியில் கட்டப்பட்ட நினைவு மண்டபம் கட்டப்பட்ட பின்பு மேற்படி நன்கொடையை முதல்முறையாக வழங்கியுள்ளனர்.

நன்கொடையைவிட நினைவாலயத்துக்கு மண் நிரப்பும் வேலையாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வேலையையும் மனோகரன், வெற்றிவேலு ஆகியோர் செய்துமுடித்துள்ளனர்.

—தினகரன் (27.01.82

**MANOHARAN & VETTIVEL**
(Engineers & Contractors)
53(31), Kandy Road, Jaffna.
Phone : 7870
BRANCH :
11c, Momsac Building, Stanley Road, Jaffna.
Phone : 7720
3204

# தங்கத் திறவுகோலின் வெற்றியின் ரகசியம் ★ 42

# த பினான்ஸ் கம்பனி [யாழ்ப்பாணக் கிளை]

## நாடறிந்த நற்சேவையில் த பினான்ஸ் கம்பனி

1976ம் ஆண்டு மாசி மாதம் 6ம் திகதி என்று எண்ணுகிறேன். யாழ்ப்பாண நகரில், பல்வேறு இடங்களிலும், ''மங்களகரமான திறப்பு விழா— த பினான்ஸ் கொம்பனி'' என்ற வர்ண சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. விளம்பரத்தைப் படித்தவர்கள் பலரும், பலவாறு கதைத்துக்கொண்டனர். ''எங்கடை பணத்தையெல்லாம் சுருட்டிக்கொண்டுபோக திட்டம் போடுகினமாக்கும்; இப்படித்தான் எல்லாரும் பணவங்கிளை திறக்கிறது கொஞ்ச நாளில் இருக்குமிடம் தெரியாது.'' என்றெல்லாம் பேசியது என்காதில் இன்றும் ஒலிக்கத்தான் செய்கிறது. இவைகளையெல்லாம் என் காதில் போட்டுஜீரணித்ததால் அன்றைய தினமே அந்நிறுவன திறப்புவிழாவில் கலந்துகொண்டேன்.

அன்றைய தினமே சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்தனர், ஓய்வு ஊதிய திட்டத்தில் சேர்ந்து கொண்டனர். பலர் பாடுபட்டுத்தேடிய பணத்தை நிலையான வைப்பிலிட்டனர். தங்கள் வாகனங்களுக்கு பினான்ஸ் வசதி பெற்றனர். இவையெல்லாம் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தவையாகும்.

காலங்கள் கடந்தன. மின்சார நிலையவீதி மக்கள் அதிகம் நடமாடும் பகுதியாக மாறத் தொடங்கியது. அன்று சிறிய கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பினான்ஸ் கொம்பனி இன்று மூன்றடுக்குமாடியாக, தனது சொந்தக் கட்டிடத்தில் நற்சேவை புரிந்துவருவதை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. இலங்கையிலுள்ள பினான்ஸ் கொம்பனிகளில் பழைமை வாய்ந்தது த பினான்ஸ் கொம்பனி ஒன்று மட்டுமே. நாற்பத்திரண்டு ஆண்டுகளாக, நாடுமுழுவதிலும், பதினைந்து கிளைகளை நிறுவி, நாடறிந்தசேவை செய்துவருவதை நாடேயறியும்,

நேர்மை, நிதானம், திறமையான நிர்வாகம், சேவை மனப்பான்மை, ஆகிய லட்சியங்களை மனதில்கொண்டு பணியாற்றி வருவது த பினான்ஸ் கொம்பனி ஒன்றேயாகும். யாழ்ப்பாணக்குடா நாட்டு மக்களின் வாழ்வுக்கு வளமாக பல்வேறு திட்டங்களையும் த பினான்ஸ் கொம்பனி செயல்படுத்திவருகின்றது. அத்திட்டங்களை பலரும் அறிந்து கொள்வது அவசியமானது.

1. சிறியதொகையானாலும் மாதாமாதம் சேமித்து, பயன்பெறும் ''சேமிப்பு வைப்புக் கணக்கு''

2. முதிர்வு எம்மை வரவேற்கும் காலத்தில், நிலையான ஓய்வூதியம் ஒன்றை பெறுவதற்கு வசதியான ''ஓய்வூதிய சேமிப்பு திட்டம்''

3. காலாகாலத்தில், எம்மிடம் இருக்கும் பணத்தை பாதுகாப்பாக வைப்பதற்கான ''காலத் தவணை வைப்புக் கணக்கு''

4. உங்கள் பணத்திற்கு நிலையான பாதுகாப்பும், அதிக வருமானமும் பொறுவதற்கான ''நிலையான முதலீடுகள்—முதிர்வடையும் வைப்புக் கணக்கு''

5. உங்கள் தோட்டங்கள், வீடுகளை அதிகவிலைக்கு விற்பதற்கான ''தோட்டகாணிப் பிரிவு''

6. பெறுமதி மிக்கபொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கான ''பாதுகாப்பு பெட்டிகள்'' வசதி.

7. ''தவணை அடிப்படையில் வீட்டுப்பாவனைப் பொருட்களை'' கொள்முதல் செய்யும் வசதி.

8. முதலீட்டாளர்களுக்கு ''அடமான கடன்'' வசதிகள்.


9. வாகனங்களுக்கு ''பினான்ஸ் வசதி''

10. தங்கநகைகளுக்கு ''அடமான கடன் வசதி''

11. நிலையான வைப்பாளர்களுக்கு ''கடன்வசதி''

இத்தனை பணிகளையும் தன்னடக்கத்தோடு, யாழ்ப்பாணக்குடாநாட்டு மக்களுக்கு செய்துவருவதில் த பினான்ஸ் கொம்பனி எந்த நிறுவனத்துக்கும் ஈடாகாது. யாழ்ப்பாணத்தில் த பினான்ஸ் கொம்பனி ஆரம்பிக்கப்பட்ட

( 6ம் பக்கம் பார்க்க)



சாதனைகளில் நிலைத்துநிற்கும்
த பினான்ஸ் கம்பனியின் கம்பீரமான தோற்றம்


# 27%

**இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பமான பினான்ஸ் கம்பனி. ஸ்தாபிதம்: மே 1940-ம் ஆண்டு**

இயக்குநர்கள்
திரு. ஜே. எல். பி. கொத்தலாவெல, ஏ. எம். எக்ஸ. லண்டன் (தலைவர், நிர்வாக இயக்குநர்)
திரு. பி. டி. விசுவாசம் எவ். ஸி. ஏ. (நிதி இயக்குநர்)
சட்டத்தரணி திருமதி பி. கே. கருணநாயக்கா (பொது முகாமையாளர்)
திருமதி என். மடவெல (காரியதரிசி)
திரு. டி. ஆர். சேனநாயக்கா ஏ. எம். எக்ஸ் ஏ. லண்டன்
சட்டத்தரணி திரு. கே. என். சோக்ஸி

**வியாபார நோக்கம்**

முதலீட்டு வைப்பு, காணி கொள்வனவு, விற்பனவு, கைத்தொழில், இரத்தினக்கற்கள், சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு நிதி அளித்தல்

தொழிலாளர்களுக்கு பங்குகள்வழங்கிய இலங்கையின் முதலாவது பினான்ஸ் கம்பனி இதுதான்

| வருடம் | வழங்கப்பட்ட பங்கீட்டு முதல் | வருமான சேமிப்பு | முதலீட்டு சேமிப்பு | மற்றைய பற்று விபரம் | வரிவிதிப்புக்கு முன்னர் உள்ள முதலீட்டுவைப்பு | வரி விதிப்புக்கு பின்னர் உள்ள நிகர வாபம் | பங்கு வாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | 1,200,000 | 1,038,278 | 2,195,700 | 771,277 | 92,070 | 82,070 | 5 |
| 1974 | 1,200,000 | 1,065,951 | 6,045,843 | 2,681,195 | 264,328 | 147,326 | 10 |
| 1975/76 | 1,200,000 | 1,315,706 | 15,400,043 | 9,106,588 | 361,480 | 361,480 | 7·5 |
| 1976/77 | 1,200,000 | 664,721 | 31,894,498 | 4,276,988 | 395,762 | 395,762 | 10 |
| 1977/78 | 1,200,000 | 1,698,335 | 41,203,537 | 3,974,723 | 167,532 | 167,532 | 10 |
| 1978/79 | 1,210,150 | 1,727,524 | 57,284,462 | 1,866,699 | 145,561 | 145,561 | 10 |

**வட்டி வீதம்**

தவணை வைப்புக்கணக்கு

| முதலீடு செய்யவேண்டிய தொகை | முதலீட்டுக் கால எல்லை | செலுத்தப்படும் வட்டி வீதம் | செலுத்தப்படும் வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 12 மாதங்கள் | 20 % வருடம் | மாதம்/காலாண்டு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 22 % வருடம் | அரைவருடம்/ |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 24 % வருடம் | வருடந்தோறும் |

புதிய அதிவிரைவான பயனளிக்கும் வைப்புக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 18 மாதங்கள் | 22 % வருடம் | உங்கள் முதலீடு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 25 % வருடம் | முதிர்ச்சிஅடைந்ததும் |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 27 % வருடம் | முதலீடும் வட்டியும் செலுத்தப்படும் |

முதலீட்டுச் சேமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆகக் குறைந்த முதலீடு ரூபா. 50/- | 24 மாதங்கள் | 15 % வருடம் |

* இந்த இலாபக்கணக்குகள் ஊழியர்களுக்கு இலாப ஊக்குவிப்புப்பணம் வழங்கியபின் உள்ள தொகையாகும்.

31-3-81வரை ரூபா 10கோடிக்கு மேல் நிலையான வைப்புத்தொகை

**த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்**

மூன்றும் மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு-1
கிளை: 249/C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7680
மற்றும் 14 கிளைகள் நாடு பூராவும்.


### சேவையே எமது லட்சியம்

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் த பினான்ஸ் கொம்பனி சேவையையே தமது லட்சியமாகக் கொண்டு தமிழர் வாழும் மாநிலத்தில், தனது முதலாவது கிளையொன்றை நிறுவியது. காலத்தால் அழியாத பயனுள்ள பலதிட்டங்களை நடைமுறைப் படுத்தி, சகலமக்களுக்கும் பயன்பெறும் வகையில், சேவையையே, இலட்சியமாகக்கொண்டு ஆலமரம் போல் மக்களாதரவுபெற்று நிறுவனம் வளர்ச்சியடைந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது சேவையில் பங்குகொண்டு உழைத்த நிறுவன நிர்வாகிகளுக்கும், பங்களிப்பு செய்த மக்களுக்கும் ஏழாவது ஆண்டில் காலடியெடுத்து வைக்கும் நன்னுளில், மனமுவந்த நன்றியைக் கூறிக்கொள்வதில் மகிழ்வடைன்றேன். இவ்வாண்டும் உங்கள் கனவுகளை நனவாக்க, எமது லட்சியம் வெற்றிபெற செயல்படுவோம் என உறுதியளிக்கின்றோம்.

பி. சிவயோகசுந்தரம்.
விற்பனை முகாமையாளர். (யாழ. கிளை)


42 வருட அனுபவத்துடன் நா
கொண்டு நம்பிக்கைச்சின்ன
பத்திரமாக பாதுகாத்து உயா
நிதிநிறுவன

த பினான்ஸ் கம்

தனது 6-வது ஆண்டுவிழாவை
உங்கள் அபிமான திரைப்பட,
பங்குபற்

த பினான்

கதம்ப

வருகிற 13-2-82 சனிக்கிழமை
யாழ்ப்பாணம் வீரசிங்க

திரு. தேவநே
அரசாங்க அதிபர் அவர்கள் த

அனைவரையும்

# 2 ஆண்டுகள் ★ த பினன்ஸ் கம்பனியின் சேவை

# 6-வது ஆண்டு நிறைவு மலர்



## கமலத்தின் கனவு நிறைவேறியது!

என்னங்க, ஒருக்காச் சொன்னு கேட்கிறீங்களா? அடகடவுளே எடுத்த சம்பளத்தையெல்லாம் குடிச்சு அழிச்சா, நம்ம குழந்தையளின் எதிர்காலம் என்னுவது. எதற்காக இந்தக்கோலம். நமக்குள்ளே என்ன பிரச்னையிருந்தாலும் தீர்த்துக்கொள்ளலாம். குடிச்சு பணத்தைடழிச்சா எல்லாம் தீர்ந்து போகுமா.

'நீங்க இப்படி மாறுவீங்க என்று தெரிஞ்சா, நான் வாத்தி வேலையைக்கூட விட்டிருக்கமாட்டேன். நமக்கும் மூன்று பெண்பிள்ளைகள், அதுகளும், இன்னும் ஐந்து ஆறு வருடத்தில் மூக்கோடும், முழியோடும் நிற்கக்கே, கௌரவம், குலம் காக்குமா. 'பிளீஸ்' ராஜா, இன்டையோடை குடிக்கிறதை நிறுத்துங்கோ...

ஓ, கமலம்... உன்னை நான், காதலிச்சுத்தான்கட்டினனுன். உன்ர அப்பன் எனகுச் சீதனம் தந்து உன்னை ஏற்கச் சொல்லல்லே. எல்லோரும் சந்தோஷத்துக்காகக் குடிக்கினம் நானும் கொஞ்சம் குடிக்கிறன் 'தற் இஸ் ஓல்.'

இனிக் கதைச்சியென்று எனக்கு விசர் வரும். எனக்கு உழைக்கத்தெரியும். சம்பாதிக்கத்தெரியும். என்ர பெட்டையழுக்குக் கலியாணம் முடிக்கத்தெரியும். இதுகளைப்பற்றி நீ கவலைப்படாத்த.

'குடிச்சா எல்லாம் பேச வரும் போதை முடிஞ்சா, நிதானம் வரும். நானும் ஒரு விசரி. ஏதோ சொல்லுறன், வேணுமென்டா யோசிச்சு நடவுங்க, இந்தக் காலத்தில் எவனும் சீதனமில்லாமல் பெட்டையளை முடிக்கமாட்டான். இப்ப கொஞ்சமாகச் சேமித்தாலும்' பத்துவருஷத்தில பெருந்தொகையாக த பினன்ஸ் கம்பனி கொடுக்கிறுங்க. குடிக்கிற பணத்தை யாவது இந்தப் பெட்டையளின்ற பெயரிலே போடுங்க, அதுசளுக்கு நல்ல வாழ்வு வரும்.

இது கமலத்தின் வீட்டில் அடிக்கடி கேட்கும். (கரணவாயிலுள்ள, அமைதியான கிராமமொன்றில், பிறந்தவள் தான் கமலம், அந்தக்கிராமத்தில், அழகும், குணமும், அத்துடன் கல்வியிலும் சிறந்தவளாகக் கமலம் விளங்கினுள். அந்தக் கிராமத்திலிருந்து, பல்கலைக் கழகத்திற்குத்தெரிவானவளும் கமலம்தான். கமலம் பல்கலைக் கழகத்துக்குச் செல்வதைப் பெற்றோர் விரும்பாவிட்டாலும், அக்கிராம மக்களின் தூண்டுதலாலே கமலமும் பல்கலைக்கழகம் சென்றுள்.

கிராம வாழ்வில் பக்குவப்பட்ட கமலத்துக்கு, பேராதனைப் பல்கலைக்கழகம், ஏதோ புதிய வாழ்வைக் கொடுக்கப் போவதாக எண்ணினுள். கூடிக்குலவித்திரியும் மாணவ, மாணவிகளைக் கண்டதும் கமலத்துக்கும் ஒரு வியப்பு. நாட்கள் நகரத்தொடங்கின.

ஏதோ அதிர்ஷ்டவசமாக, சந்தித்த ராஜாவை அவள் மனதார நேசிக்கத்தொடங்கினுள். அடிக்கடி பேராதனைப் பூங்காவில், இருவரும் சந்தேகங்களைத் தீர்க்கும் இடமாகவும் அமைத்துக்கொண்டனர்,

ஒருவரையொருவர் மனதார விரும்பி காலத்தைத் தேடிக்கொண்டனர்,

கமலம்—ராஜாவின் நட்பு, கரணவாயிலுள்ள கமலத்தின் தாய் தந்தையருக்கும் எட்டியது, இதுக்குத்தான் பெட்டையளைப் படிப்பிக்கக்கூடாது என்று சொல்லுறது.

சீ. என்ன அவமானம், இந்தச் சனங்களுக்கு என்ன தெரியும். நானும் அவளுக்கு ஒரு என்ஜினியரல்லோ பார்த்து இருக்கிறன். அவனுக்குத் தெரிஞ்சா என்னுவது.

சீ, கேவலம்.

இப்படியாகச் சீறினுர் சட்டநாதர். மனைவி பொன்னம்மாவோ, ஏன் சீறுறீங்க, யாரோ சொன்ன கதையைக் கேட்டு இப்படிப் பேசிறீங்க. கமலம் அப்படியென்ன அறிவு கெட்டவளா, இடம் தெரியாமை மாளுவதற்கு. அவளுக்கு நல்ல அறிவு இருக்கு.

இந்த வருடம் அவள் பட்டதாரி. அதற்குப்பிறகு அவளிட கலியாணத்தை ஆவணியில செய்யலாம். தையிலகூட, அம்மா, நான் பல்கலைக்கழகத்தில் நல்லா இருக்கிறன், ஒன்றுக்கும் யோசியாதீங்கள் என்று சொன்னவள். இந்தக் கதையளையெல்லாம் விட்டு விட்டுச் சாப்பிடுங்க.

ஐயா, ஐயா, கடிதம் கடிதம் (தபால்காரனின் ஒலி கேட்கிறது.) பொன்னம்மா அந்தகடிதத்தைவாங்கு, அவள் கமலத்தின் கடிதமாக்கும். சோதினை முடிஞ்சுபோச்சுதாக்கும், வாறதைப்பற்றி எழுதியிருப்பாள். படி பார்ப்பம்.

அன்புள்ள அப்பாவுக்கும் அம்மாவுக்கும்;

நலம். இக் கடிதம் பெரிதும் மகிழ்ச்சியைத் தரும் என நினைக்கிறேன்.

இன்றையதினம் நான் பட்டதாரியாக வெளிவருகிறேன். இந்த மகிழ்வான நேரத்தில் உங்கள் அன்பு மகள் கமலம், தனக்கு மிக உதவியாக பல்கலைக்கழகத்தில் நடந்து கொண்ட ராஜாவைப் பதிவுத் திருமணம் செய்துகொள்கிறுள். விதிஎன்று சொல்வார்களே அது எப்படி அமைந்து விட்டது என பெருமைப்படுங்கள். நாங்கள் இருவரும் வருகிற 6ந் திகதி மாலை உங்களைச் சந்தித்து ஆசிபெறுவோம்.

இப்படிக்கு
அன்புள்ள மகள்
கமலம்.

பார்த்தியாடி, அவள் செய்த வேலையை, எல்லாம், இந்தப் படிப்பு செய்த வேலை— எதற்கும் யோசித்துப் பயனில்லை. அவள் இங்கு வரவேண்டியதில்லை. அவளுக்கு நான் ஒரு சதமும் கொடுக்கமாட்டேன். அவள் எனது மகளில்லை. அவளை மறந்துவிட்டேன், கடிதம் வந்ததும் வராததுமாக சட்டநாதரின் கடிதமும் கமலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கடிதத்தைக் கண்டதும் கமலத்துக்கு ஆச்சரியம் கொடுக்கவில்லை. அப்பாவின் குணம் அவளுக்கு தெரியும் தான். அப்பா முதலில் சீறுவார். பின்னர் மகள் என்ற பாசம் வராமலா போய்விடும் என்று எண்ணினுள்.

குடும்பம் குதூகலமாக உருண்டது. கமலமும் ராஜாவும் ஆசிரியர்களாக, ஒரே பாடசாலையில் கல்வி கற்பிக்க தொடங்கினர். பத்து ஆண்டுகளில் மூன்று குழந்தைகள், தனிக்குடித்தனத்தில், பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக, கமலமும் ஆசிரியத் தொழிலை ராஜாவின் விருப்பத்தின்பேரிலேயே விலகினுள்—

ராஜாவோ நண்பர்களுடன் கூடி, மதுவுக்கு அடிமையானுர். சாதாரணமாக குடித்துவந்தவர், நாளடைவில் மதுவுக்கே அடிமையானுர்.

ஏன் குடிக்கிறீங்க, குடியை விட்டிடுங்க என்று கமலம் கெஞ்சும்போதெல்லாம் சும்மா பேசாதே என்றுதான் ராஜாவின் குரல் ஒலிக்கும். கணவனின் போக்கு அவளுக்கு திருப்தியளிக்கவில்லை. கணவனுக்குத் தெரியாமல் சம்பாதித்த பணத்தையெல்லாம் த பினன்ஸ் கம்பனியில் நிரந்தர வைப்பலிட்டாள்.

15 ஆண்டுகளின் பின்னர் த பினன்ஸ் கம்பனியினர் கமலத்தின் பெயருக்கு ஒரு லட்ச ரூபாவுக்கான காசோலையொன்றை அனுப்பிவைத்தனர்.

இதைக் கண்டதும் ராஜாவுக்கோ, கமலத்துக்கோ மகிழ்ச்சிதாங்கவில்லை. நாங்கள் லட்சாதிபதி என்றவாறு ராஜா "சத்தியமாக குடிக்க மாட்டேன்" என்று சபதமும் செய்தான்


இதைத்தான் அன்று சொன்னன். குடிச்சதையெல்லாம் வைப்பிலிட்டால் எவ்வளவு பணமிருக்கும். கேட்டீங்களா? இப்ப சொல்லுங்க எது சரியென்று.

கதவில் தட்டும் சத்தம் அவர்களை யாரோ வருவதை உறுதிப்படுத்தியது,

வணக்கம்— நீங்கதான் ராஜா, ஆமாம், உங்கமாமனுர் சட்டநாதர். தனது பேத்திக்கு 'சம்பந்தம் பேசியிருக்கார், நாங்கதான் சம்மந்தியென்றனர். எங்க பையன் நல்ல பொடியன், என்ஜினியர், குணசாலி. சீதனமாக ஒருலட்சம் தரவேண்டுமென்றனர்.

மகளுக்கும் என்ஜினியர், சட்டநாதர் குடும்பமும் ஒன்றிணைந்தன. கமலம் த பினன்ஸ் கம்பனிக்கே நன்றி கூறினுள். 42 வருடங்களில் எத்தனையாயிரம் மக்கள் கனவு நிறைவுபெற்றுவிட்டது என பெருமிதம்கொண்டாள்.

-மீரா.




சிறிய கட்டிடம்தான் மக்களுக்கு நம்பிக்கையூட்டிய பினன்ஸ் கம்பனி


நாடறிந்த
15-கிளைகளுடன்

## த பினன்ஸ் கம்பனி

தலைமைக்காரியாலயம்.
3ம் மாடி
சிலிங்கோ மாளிகை
கொழும்பு—1.

கிளைகள்:-

- 249/C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
- குருநாகல்
- மாத்தறை
- பொலன்நறுவை
- இரத்தினபுரி
- கண்டி
- அனுராதபுரம்
- கொழும்பு—11
- நுகஹெறாட
- பதுளை
- அம்பாறை
- கழுத்துறை
- நீர்கொழும்பு
- மட்டக்களப்பு
- கொழும்பு—2



## நிலையான வைப்பிற்கு அதிகவருமானம் வழங்குவது த பினன்ஸ் கம்பனி ஒன்றே


## ஒப்பற்ற சேவை எமது சிந்தனை

த பினன்ஸ் கொம்பனி யாழ்ப்பாணத்தில் கிளையொன்றினை ஆரம்பித்து ஆறு ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. குறுகியகாலத்தில் எமது சேவை போதுமானதாக இல்லாவிட்டாலும், இவ்வாண்டில் பூரண திருப்தியை ஏற்படுத்துமென மகிழ்வோடு அறிவிக்கின்றோம். யாழ்ப்பாண மக்கள் எமது நிறுவனத்தில் கொண்டுள்ள அபிமானமும், நம்பிக்கையும் மேலும் வளர எமது சிந்தனையை வளம்படுத்துவோம். இவ்வாண்டும், உங்கள் நலனில் அதிக சிந்தனைசெலுத்த ஒப்பற்ற சேவையாற்றுவோமென சங்கற்பம் பூணுவோம். கடந்தகாலங்களில் எமது சேவைசிறப்புற உழைத்த நிறுவன நிர்வாகிகளுக்கும், மற்றையோருக்கும், எமது வாழ்த்துக்கள்.

எம். ஜெயமனேகரன்.
நிர்வாக முகாமையாளர்.


...டெங்கும் பல கிளைகளையும் ...ழும் உங்கள் பணத்தைப் ...ர்ந்த வட்டியுடனும் தரும் ...னமான

...பனி யின் யாழ்ப்பாணக்கிளை ... இன்று கொண்டாடு முகமாக ... வானொலிக் கலைஞர்கள் ...றும்

...ஸ் நைற்

...நிகழ்ச்சி

... மாலை 6-30 மணியளவில் ...கம் மண்டபத்தில்

...ன் நேசையா ...தலைமையில் நடைபெறும்

...வாடிக்கையாளர்கள் அன்பர்கள் ... அன்புடன் அழைக்கின்றேம்.

கடைசி வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டும்
வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
நூல்வேலி

Regal Cinema
(Jaffna) Tele. 360.
தினசரி 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
Warlords of Atlantic

12 - 2 - 82 முதல்
தனிமரம்
டைரக்ஷன் துரை

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்று மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

ஸ்ரீதர் வாழ். நகர்
தினசரி: 10:30, 2:30, 6:00, 9:30
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதிய பிரதி)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
141 வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
குரு
அநேகரின் வேண்டுதலுக்காக சில தினங்கள் மட்டும்!

Rajah
JAFFNA
LOVE BUG'S RETURNS
Daily 10—30, 2—00, 4—30, 7—30, 9—30
WALT DISNEY
Presents
HERBIE GOES
TO MONTECARLO
(Color by Technic
For School Chieren Contact Management

WINDSOR
(JAFFNA)
Daily 5 Shows
Grand Gala Release
'Airport '80 – The Concorde'
Starring : Alain Delon. George Kennedy
Susan Blakely.

இரு மடங்கு ஒலி வேகத்தில் செல்லும் 'கொங்கோட்' விமானம் பாரிஸ் நகரத்திற்குத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்குகின்றது. அதிவிசேஷ பயிற்சி, அனுபவம், ஆற்றல் மிக்க விமானிகள் அதைச் செலுத்துகின்றார்கள். திடீர்த் தாக்குதலினால் பிரயாணிகளின் உயிர்கள் ஊசலாடுகின்றன. விமானிகள் எப்படி இதைச் சமாளிக்கின்றார்கள் என்பதை வெண்திரையில் காண்க.


## கட்டிடப்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தில் சிறப்பாகவும், அழகாகவும் அமைத்து முடித்த மனோகரன் வெற்றிவேலு ஒப்பந்தக்காரரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். மொத்த மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா 3.5 கோடியில் ரூபா 1.5 கோடி செலவில் முடிவுற்ற மேற்படி கட்டிடத்தை பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் சிறப்பாக அமைத்து முடித்தமை பாராட்டுக்குரிய செயலாகும். இது போன்ற கட்டிடப்பணிகள் தொடர்ந்தும் சிறப்புறச் செய்து, மேலும் பாராட்டுக்குரியவர்களாக இவர்கள் விளங்கவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

## சிரமத்தின்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்து, பல கட்டிடப் பொருட்கள் உரிய காலத்தில் கிடையாதபோதிலும் அவற்றை சிரமத்தோடு தருவித்து இக்கட்டிடத்தை இவர்கள் பூரணப்படுத்தியுள்ளனர். இதேபோன்று, மேல் இரண்டு மாடியையும் சிறந்த முறையில் உரிய காலத்தில் நிறைவுறச் செய்வார்கள் என்பது எனது நம்பிக்கை. மனோகரன் வெற்றிவேல் ஸ்தாபன பொறியியலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

## தரமான

(3ம் பக்கத் தொடர்ச்சி)

துத்தந்த மனோகரன் சகச வெற்றிவேல் கட்டிட நிபுணர்களுக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகுக. இக்கட்டிட நிபுணர்கள் செல்வநாயகம் நினைவு ஸ்தூபி, காங்கேசன்துறை உணவுக் களஞ்சியம், ஆனையிறவு உப்பள வீடுகள் போன்ற பல தரமான கட்டிடங்களை அமைத்த அனுபவம் உடையவர்கள். இவ்வனுபவத்தைப் பயன்படுத்தி மருத்துவபீட முழு கட்டிட வேலைகளையும் வெகு விரைவில் பூர்த்திசெய்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு பெரும் சேவை புரிவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

## ஆதரவு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

றியினை பலனை எதிர்பாராமல் கூறும் அதே நேரம் வருங்காலமும் நல்லமுறையில் சிறப்புறவும் முதல் தொகுதியை கட்டிமுடித்த நாம் ஏனைய இரு தொகுதிக்கட்டிடங்களையும் காலக்கிரமத்தினுள் கட்ட வேண்டிய சூழ்நிலைக்கு கால் எடுத்து வைத்துள்ளோம். ஏற்கனவே எமது நிறுவனத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைத்த எமது சகல துறை தொழிலாளர்கள் அனைவருக்கும் மற்றும் சகல விநியோகஸ்தர்கள் அனைவரும் ஆற்றியபணிக்கும் நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் எமது முயற்சி வெற்றிபெற சகல துறைகளிலும்எமக்குஆதரவும் ஒத்துழைப்பும் தருவார்கள் என்பது எமது உறுதியாகும்.

''செய்வன திருந்தச் செய்'' என்ற வாக்கிற்கமைவாக நாம் தொடர்ந்து செய்யவுள்ள பணி மிகவும் மூக்கிய மானதாகும். எமக்கு சிரமங்கள் இருந்தாலும் மாணவர்களின் நலன் கருதி நாம் மேற்கொள்ளவுள்ள திட்ட வேலைகளை செய்து முடிக்க எமது நிறுவனத்திலுள்ள வருங்கால நிபுணர்களான தற்போதைய இளம் தொழில் நுட்பவியாளர்களும் ஒத்துழைப்புவழங்குவார்களென நாம் நம்புவதுடன் எமது நிறுவனம் சகலரதும் ஆசியுடன் ''பணி செய் பலனை எதிர்பாராதே'' என்ற குறிக்கோளின் அடிப்படையாக இராஜநடையில் வளர இறைவனின் கிருபையை வேண்டி நிற்கின்றோம்.

''அன்பும் அறிவும் வளர்வதாக''

- சு. இ. மனோகரபூபன்,
- இ. வெற்றிவேலு.

# இன்றைய பலன்

**தை மாதம் 24ம் திகதி**
**சனிக்கிழமை**
**(6—2—82)**

மேடம்: வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

இடபம்: பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடைகள் உண்டு. நம்பிக்கைமோசடி மூலம் பணமும்பறிபோகலாம் முன் எச்சரிக்கை நன்று.

மிதுனம்: அன்னியர்கள் மத்தியில் அதிகம் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். வயிற்றுக் கோளாறுக்கு இடம் உண்டு. உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். சிலருக்கு நயன ரோகமும் தென்படும்.

கடகம்: கனிவான நினைவுகள் தலைதூக்கும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. கனிவான பேச்சின்மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். தனச் சிறப்புக்கும் இடமேற்படும். சுப தினம்.

சிங்கம்: சீறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத விதமாக உடல் நலம் பாதிக்கப்படும். பொறுமை வேண்டும்.

கன்னி: கொள்வனவுகளில் நல்லதிருப்பம் ஏற்படும். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. கல்வித் துறையில் முன்னேற்றம் தென்படும். அறிஞர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

துலாம்: நினைத்ததை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள். தொழில் துறையில் பதவி உயர்வுக்கும் இடமுண்டு. சிலர் வாழ்க்கையில் காதல் விவகாரங்களும் ஏற்படலாம்.

விருச்சிகம்: எதிர்பார்த்த முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை உருவாகும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியமல் கவலைப்படுவீர்கள். பெரியவர் ஒருவர் ஆதரவு அளிக்க முன்வருவார். அடக்கம் விரும்பத்தக்கது.

தனு: எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும். மற்றவர்கள் மெச்சும் வண்ணம் கடமையாற்றுவீர்கள். இதயத்துக்கு இதம் அளிக்கக்கூடிய பரிசும் கிடைக்கலாம். வேண்டியவர்களின் ஆதரவு பெருகும்.

மகரம்: எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரி விடக்கூடும். நிதானம் வேண்டும்.

கும்பம்: வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் பெருகும், செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும். ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்குச் சாதகமான முடிவைத் தரும்.

மீனம்: வியாபாரவிருத்திக்கும் இடமுண்டு. வெளியிடத் தொடர்புகளில் முன்னேற்றம் தென்படும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். நீண்ட நாள் கடன் இன்று நிவர்த்தியாகும். புத்திர வழியாலும் புகழ் கிடைக்கும்.

**சோதிடக் கலாநிதி**
**திருமலை க. வேலுப்பிள்ளை**

## நன்றேசெய்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் தமக்கும் தமது குடும்பத்திற்காகவும் சேவையாற்றுது தமது மூலமாகப் பொதுமக்களுக்காக 1969ம் ஆண்டுமுதல் ஆற்றிவரும் தொண்டு சாலச் சிறந்தது மாத்திரமல்ல. பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதும்.

உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழ்மக்களின் நெஞ்சத்தில் வாழும் தலைவர் மூதறிஞர் அமரர் தந்தை செல்வா நினைவாலயத்தை பலனை எதிர்பாராமல் கட்டி முடித்தது மாத்திரமல்ல, பெரும் தொகையான பணத்தினைக் கொண்டு சிரமதான அடிப்படையில் மண்நிரப்பும் வேலையினையும் செய்து முடித்ததும் தமக்கு வரவேண்டிய ஆதாய பணமான ரூபா 64,757 சதம் 34ஐ தந்தை செல்வா அறங்காவல் குழுவிற்கு விட்டுவைத்துள்ளதும் (ஆதாரம்: தினகரன் (30...01—1982) அவர்கள் தமிழர்கள் என்பது மாத்திரமல்ல பொதுத்தொண்டர்கள் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளது.

இச்சேவை தான் நன்று?எழுதினல் இடம் போதாது அவர்கள் இன, மொழி, சமய நோக்கன்றி மக்கள் சேவை என ஆற்றிவரும் அரும்பணி சிறக்க பொதுமக்களாகிய நாமும் எமது அன்றாட இறை வழிபாட்டில் அவாகளுககாக மன்றாடுவோமாக.

அவர்கள் வாழ்வு சிறக்க
அவர்கள் பொதுப்பணி வளர
அவர்கள் மூலம் பொதுமக்களாகிய
அனைவரது பொருளாதாரமும் வளர

இறைவன் இராம இலட்சுமணராகிய ஈழம்வாழ் மனோகரன் வெற்றிவேலு வினர்க்கு நீண்ட அருளை இறைஞ்சுவாராக.

வளர்க அவர்கள் பணி,
வளர்க அவர்தம் தமிழ்ப்பற்று,

ஊறணியூர்
மு. செல்வரசா.

## ஒப்பந்தக்காரர் ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சதத்தையும் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர் என்று தந்தை செல்வா அறங்காவற் குழுத் தலைவர் திரு. கு. நேசையா, செயலாளர் திரு. சு. நடராசா ஆகியோர் பத்திரிகையாளர் மகாநாடொன்றில் தெரிவித்தார்கள். இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஏற்பட்ட செலவுத் தொகையான 4 லட்சம் ரூபாவைமாத்திரமே அவர்கள் அ விட்டார்களாம்.

இந்த மனப்பான்மைக்காக தந்தை செல்வா அறங்காவற் குழு மனோகரன்—வெற்றிவேல் ஸ்தாபனத்தினருக்கு நன்றி தெரிவித்துள்ளது.

—'வீரகேசரி' (30—1—82)

## ஆயிரம் ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

நாவற்குழியைச் சேர்ந்த கே. சத்தியசீலன் என்பவர் தொலைக்காட்சிப் படத்தை நாவற்குழியில் காட்டியதாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக் எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

(க)

## நாடறிந்த...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னரே வட்டி விகிதங்களும் கணிசமானஅளவு உயர்ந்தது. வைப்பாளர்கள் அனைவரும் எந்தவிததாமதமின்றி வட்டியை பெற்றதும், யாழ்ப்பாணத்தில் த பினன்ஸ் கொம்பனி நிறுவியபின்னரே, சுருங்கச் சொல்லின். நாடறிந்த சேவையில் த பினன்ஸ் கொம்பனி முன்நிற்கின்றது.

தொடர்ந்தும் சிறந்த பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

:-ஸச்சி

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தும்பளை நெல்லண்டை வீதியில் சகல வசதிகளுடனுன வீடு மூன்று பரப்புக்காணியுடன் விற்பனைக்குண்டு. பா. சுப்பிரமணியம், சட்டத்தரணி தும்பளை, பருத்தித்துறை. 2200

யாழ்ப்பாணம் மாட்டீன் ரோட் லேனில் 1½ பரப்பில், நன்னீர்க் கிணற்றுடன், நான்கு அறைகள் கொண்ட வீடு. விலை 5½ லட்சத்திற்கு மேல் விண்ணப்பிக்க. விளம்பர இல. 2181 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் சமீபத்தில் கண்டி ரோட்டில், பெந்தேகோஸ் சபைக்குப் பக்கத்தில் கிணற்றுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க. திருமதி புறாடி, 4. புறாடி ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம். 2197

அரசாங்க உத்தியோகத்தர் உபயோகிக்கும் நல்ல நிலையிலுள்ள N தொடர் ஒஸ்டின் கேம்பிரிஜ் (ஆ—50) கார் விற்பனைக்கு உண்டு. கரிச்சந்திரன் 7ம் கட்டை ஒழுங்கை, மல்லாகம். 2188

## தேவை

கருணைநிலையத்தில் மேற்றன் (MATRON) ஆக ஊழியம் செய்ய கிறீத்த சேவையில் விருப்புள்ள ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியுள்ள 45—60 வயதுக்குட்பட்ட பெண்மணி தேவை. விண்ணப்பிக்கவும் WARDEN, கருணைநிலையம், கிளிநொச்சி. 2199

நவீன முறையில் அமையப் பெற்ற சைவ ஹோட்டலுக்கு சகல ஊழியர்களும் தேவை. 8—2—82க்கு முன் நேரில் சமுகம் அளிக்கவும். ஸ்ரீ அம்பாள் சைவ ஹோட்டல் அன்ட் பேக்கரி, ஸ்டேசன் வீதி, மாங்குளம். 2137

## பயிற்சி

பாலர் கல்விக் கழகத்தால் பாலர் பாடசாலை ஆசிரியைக்கான பயிற்சி வகுப்பு எதிர் வரும் தைப்பூசத்தன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. இவ்வகுப்பு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற உள்ளது. பயில விரும்புவோர் நற்சான்றுகளுடன் நேரில் வரவும். விபரங்கட்கு: இ. இரத்தினகோபால், செயலாளர், 49/5, யாழ்ரோட், (ஸ்ரீதர் தியேட்டருக்கு அண்மையில்) (2174)

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன் (செய்முறைப் பயிற்சிகளுடன்) Hotel Management பயிற்சி ஜேர்மன், பிரஞ்சு மொழி வகுப்புக்களும் ஆரம்பம். 10-02-82 அனைவரும்சேரலாம். விபரங்களுக்கு நேரில் வரவும். நாஷனல்அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2187

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் (339) 149, கஸ்தூரியார் வீதி, ''தம்பியப்பா அன் சன்'' த. சபாநாதன் அவர்களிடம் 1—4—78 முதல் 31—3—80 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 27—2—82 காலை 9 மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து விற்கப்படும்.

643, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். **வி. செ. குட்டிப்பிள்ளை** ஏலவிற்பனையாளர் 2195

## வெள்ளி விழா நிதி

ஹச்சின்ஸ் அம்மாவின் கருணை நிலைய ஊழிய வெள்ளி விழா நிதிக்கு கொடைகள் அனுப்ப விரும்புவோர் 28-2-82 இற்கு முன் அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

2198

சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

சுன்னுகம்

## பதவி வெற்றிடம்

பதில் கிளை முகாமையாளர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சங்க எல்லைக்குட்பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

### தகமைகள்

1. வயது: 23 க்கும் 40 க்கும் இடைப்பட்டவர்.
2. கல்வி: 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரணம்) சித்தி.

காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களையும், மற்றும் விபரங்களையும் ரூபா 2/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 15—2—82 ஆகும்.

பொதுமுகாமையாளர்

சுன்னுகம், ப. நோ. கூ. சங்கம்,
3—2—1982. 2196

கழிவுப் பொருள்

## ஏலவிற்பனை

எதிர்வரும் 27—2—82 ந் திகதி சனிக்கிழமை மு. ப. 10 மணிக்கு மேற்படி சங்கக் காரியாலயத்தில் கீழ்க்காணும் கழிவுப் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும். கொள்வனவு செய்வோர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும். பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் 3—2—82 தொடக்கம் வேலை நாட்களில் மு. ப. 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் பார்வையிடலாம்.

### கழிவுப் பொருட்கள் விபரம்

1. மண்ணெண்ணெய் வெற்று பரல்கள்.
2. லொறி டயர்கள், டியூப்கள்.
3. குடை வகைகள்.
4. சப்பாத்து வகைகள்.
5. புடவை வகைகள்.
6. போத்தல் வகைகள்.
7. கிருமிநாசினி வகைகள்.

பொதுமுகாமையாளர்

வ. கி. வ. ப.
ப. நோ. கூ. சங்கம்,
அச்சுவேலி.
2201

யாழ். பல்கலைக்கழக

## தமிழ் மன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றத் தேர்தலில் பொ. சத்தியகீர்த்தியின் தலைமையிலான செயலணியைச் சேர்ந்த பதினெரு உறுப்பினர்களும் அமோக வெற்றியீட்டியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கலை, விஞ்ஞானம், மருத்துவம், நுண்கலை ஆகிய அனைத்துப் பீடங்களையும் உள்ளடக்கிய இம்மன்றத்தில் பின்வருவோர் கீழ்க்காணும் பதவிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: பொ. சத்தியகீர்த்தி, உப தலைவர்: சி. பராசக்தி, செயலாளர்: தி.பத்மநாதன், உபசெயலாளர்: ச: அருந்தவநாதன், பொருளாளர்: த.பாலகிருஷ்ணன், பத்திராதிபர்: பா. மனோகரன், செயற்குழு உறுப்பினர்கள்: க. முருகானந்தன், கே. எஸ். இரத்தினகாந்தி, மு.கோபாலசிங்கம், செ. மோகனசுந்தரம், கே. எம். அப்துல் பரீட்.

இவர்கள் தமது முதல் நடவடிக்கையாக பாரதி விழாவை பிரமாண்டமாகக் கொண்டாடுவதெனவும் அடுத்து தமிழ் மக்களின் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கத்தக்கவகையில் மாபெரும் முத்தமிழ் விழா ஒன்றைக் கொண்டாடுவதாகவும் தீர்மானித்துள்ளனர். (இ)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினுலும், அப்பகுதி மக்களினுலும் வைத்தியசாலை முன்பாக வைரவர் ஆலயம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாலய அடிக்கல் நாட்டு வைபவத்தை யாழ். சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் வைத்திய கலாநிதி க. மாணிக்கம் ஆரம்பித்து வைத்தார். இவ் ஆலயத்தின் கும்பாபிஷேக வைபவம் இம்மாதம் 8ம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது. (இ)

காப்டன் லொயிட்டின்

# அபார ஆட்டத்தால் மே.இந்திய கோஷ்டிவெற்றி

## தொடரில் எவருக்கும் வெற்றி இல்லை

அடிலெய்ட், பெப். 5

மேற்கிந்திய கிரிக்கட் காப்டன் கிளைவ் லோயிட்டின் அபார துடுப்பாட்டத்தினுல் மேற்கிந்திய கிரிக்கட் கோஷ்டி ஆஸ்திரேலிய கோஷ்டியை 5 விக்கட்டுகளால். வெற்றி பெற்றது இவ்வெற்றியின் மூலம் ஆட்டத் தொடர் சரி சமமாக முடிவுற்றது.

கடைசிநாள் ஆட்டம் மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் இடம் பெற்றது.

பகல் போசன இடைவேளைக்கு 15 நிமிடம் முன்னதாக வெற்றிபெறுவதற்கு 236 ஓட்டங்களைப்பெற வேண்டியநிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்திய கோஷ்டி இறுதி ஒரு மணித்தியாலத்தில் அவசியம் வீசவேண்டிய 20 ஓவர் முடிவடைவதற்கு 17 பந்துகள் இருக்கும்போது 5 விக்கட்டுகளை இழந்து தேவையான ஓட்டங்களை எடுத்தது.

காப்டன் லோயிட் 2 வது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காது 77 ஓட்டங்களையும் முதல் இன்னிங்ஸில் 53 ஓட்டங்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. கிறீன்டிச் 52 ஓட்டங்களையும் விவியன் றிச்சர்ட் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

2 வது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய வீரர்கள் அலன் போர்டா (126 ஓட்டங்கள்), கிம் கியுஸ் 84 ஓட்டங்களையும், புரூஸ் லயர்ட் 78 ஓட்டங்களையும் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இந்த டெஸ்டின் சிறந்த வீரராக அலன்போர்டரும் [78, 126], இத்தொடரின் சிறந்த வீரராக 24 விக்கட்டுகளைக் கைப்பற்றிய மேற்கிந்திய வேகப்பந்துவீச்சு வீரர் மைக்கல் கோல்டிங்கும் தெரிவு செய்யப்பட்டனர்.

முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றிருந்தது. 2 வது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விபரம்: ஆஸ்திரேலியா 238, 386, 389, 239—5. (இ)

# தி. மு. க. உறுப்பினர் வெளிநடப்பு

சென்னை, பெப். 5

சர்க்காரிய கமிஷன் முன் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும், அதிமுக உறுப்பினர்களும் அளித்த சாட்சியம் தொடர்பாக தி,மு.க. உறுப்பினர்கள் தமிழக சட்டப் பேரவையில் கருத்துத் தெரிவிக்க துணைசபாநாயகர் திரு, எச், வி. பாண்டியன் அனுமதியளிக்கவில்லை.

இதனைத்தொடர்ந்து திமுக உறுப்பினர்கள் நேற்று தமிழக சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்புச்செய்தனர். [வெ]

கிரிக்கட்டெஸ்ட்

# இந்தியாவுக்கு வெற்றிக் கேடயம்

புதுடில்லி, பெப். 5

இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்குமிடையே கான்பூர்ல் நடைபெற்ற 6வது கிரிக்கட் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்த டெஸ்ட்டில் இங்கிலாந்து கோஷ்டி முதலாவது இன்னிங்சில் 9 விக்கட்டுகள் இழப்பிற்கு 378 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய கோஷ்டி முதலாவது இன்னிங்சில் 7விக்கட்டுகளை இழந்து 377 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்திற்கும் இந்தியாவிர்குமிடையே நடைபெற்ற 6 கிரிக்சட் டெஸ்ட்களில் ஒரு டெஸ்ட்டில் இந்திய கோஷ்டி வெற்றி பெற்றதும், 5டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததும் தெரிந்ததே. இந்த டெஸ்ட் தொடரில் இந்திய கோஷ்டி வெற்றி பெற்று, வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

இந்திய வீரர் கபில்தேவ் இந்த டெஸ்ட்டில் 116 ஓட்டங்களைப் பெற்று சிறந்த ஆட்டக்காரருக்கான 20,000 ரூபா பரிசைப் பெற்றுக்கொண்டார்.

இங்கிலாந்து வீரர் இயபொதம், இந்திய வீரர்களான சுனில் கவாஸ்கர், டோசி ஆகியோரும் முறையே சிறந்த ஆட்டக்காரர், பந்துவீச்சாளர்களுக்கான பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர். (வெ)

# பருத்தித்தீவு, உற்சவம்

(மாவிட்டபுரம்)

எழுவைதீவு, அனலை தீவு ஆகிய இரு தீவுகளுக்குமிடையில் உள்ள சிறிய தீவான பருத்தித்தீவில் கோயில் கொண்டுள்ள புனித காணிக்கை மாதாவுக்கு வருடாந்த திருநாள் ஆராதனைகள் சிறப்பாக நடத்தப்பட்டன,

பிரபல்யம்பெற்று விளங்கும் இவ்வாலய திருநாள் ஆராதனைகளில் பங்குபற்ற வெளியிடங்களிலிருந்து 200க்கு மேற்பட்ட யாத்திரிகர்களும் அங்கு வந்திருந்தனர். ஆராதனைகளை ஊர்காவற்றுறை பங்குக்குரு வண. ஏ. எப். குலாஸ் அடிகள் முன்னின்று நடத்தி வைத்தார். முதலில் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் காணிக்கை மாதாவின் சுற்றுப்பிரகாரமும் திருச்சொரூப ஆசீர்வாதமும் இடம் பெற்றன:

இந்த பருத்தித்தீவில் மீன் பிடித்தல் ஆடுவளர்த்தல் ஆகிய தொழில்களை மேற்கொள்ளும் 7 குடும்பங்கள் மட்டுமே வாழ்வதாகவும் அவர்கள் இத்திருநாளுக்கான ஏற்பாடுசளை சிறப்புறச்செய்திருந்ததாகவும் அங்கு சென்றிருந்த யாத்திரிகர் ஒருவர் தெரிவித்தார்.

## மோட்டார்சைக்கிள் எரிந்தநிலையில் மீட்பு!

(கோண்டாவில்)

வீட்டுப் படலையில் இரவு 8 மணியளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சுமார் 6000 ரூபா பெறுமதியான கொண்டா மோட்டார் சைக்கிள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் நவாலியில் நடந்துள்ளது.

மோட்டார்சைக்கின் உரிமையாளரான ரவீந்தரன் இது பற்றி யாழ். பொலிஸில் புகார் செய்துள்ளார்.

நவாலியிலுள்ள சின்னத்துரை வீட்டிற்குச் சென்ற ரவீந்திரன், மோட்டார் சைக்கிளை வீட்டுப் படலையில் நிறுத்திவிட்டு உள்ளேசென்று கதைத்துக்கொண்டிருந்துவிட்டு திரும்பி வந்து பார்த்த போது மோட்டார் சைக்கிளைக் காணவில்லையென புகாரில் கூறப்பட்டுள்ளது.

பொலிசார் உடன் தீவிர விசாரணையை மேற்கொண்டு, கொக்குவில் இந்துக் கல்லூரி பிற்பகுதியில் எரிந்த நிலையில் மோட்டார் சைககிளைக் கண்டெடுத்துள்ளனர். (க)

## தமிழர் சுயாட்சிக்கழகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதும், அப்பொழுது இக்கழகத்தில் ஒரேஒரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டும் அங்கம் வகித்திருந்ததும், இரண்டு பாராளுமன்றப் பிரதிநிதிகள் இல்லாததினால் அப்போதைய சட்டத்தின் பிரசாரம் கழகம் பதிவுசெய்யாதிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## ஈழநாடு தொலைபேசி எண்கள்

8-2-82-ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம்

ஈழநாடு ஆசிரியர் பகுதி தொலைபேசி எண்கள்

(பகல்) --- 8126

(இரவு) --- 389

நிர்வாகி,
'ஈழநாடு'.

(2205)

## அறிவித்தல்

சோலையான் விளையாட்டுக் கழகத்தினரால் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் 9—1—82 இல் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டு இழுப்பில் பரிசுபெற்ற இலக்கங்கள்:

1ம் பரிசு—212 2ம் பரிசு—219 3ம் பரிசு—267

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள் பரிசில்களை சோலையான் விளையாட்டுக் கழகத்தினரால் மு. ஸ்ரீ சண்முகராசா (சிரேஷ்ட உதவி செயலாளர், பிரதேசஅபிவிருத்தி சபை) தலைமையில் 6—2—82 சனி மாலை 6 மணியளவில் ஆரம்பமாகும் கலைவிழாவில் வந்து பெற்றுக்கொள்ளலாம். கலைவிழா காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் நடைபெறும். 2210


## திறப்பு விழா

நிகழும் துர்மதி வருடம் தை மாதம் 24—ந் திகதி (6—2—1982) சனிக்கிழமை மாலை 3—15 மணியளவில் வரும் சுபவேளையில்,

— எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற —

### கிருபா போட்டோ அன் றெக்கோடிங் சென்ரர்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
காசிப்பிள்ளை கிருபாகரன்,

காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.
நியூற்ரோன் சவுண்ட், அளவெட்டி.

(2207)

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
## உல்லாச பஸ் சேவை

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

யாழ் - கொழும்பு: செவ்வாய், வியாழன், ஞாயிறு

கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி.

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். கோப் ஸ்டோர்ஸ் லிமிட்.
420 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன் — 370, — 438, — 537.

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலைபேசி இல: 273, சாவகச்சேரி

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
463, காலிவீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல. 22830

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
இல. 157/2, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி இல. 23277.

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866.

**கட்டணம் ரூபா 65-00**


## ஸ்ரீகாந்தா---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள். அரசாங்க அதிபர் என்ற முறையிலும் பின்னர் காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தர செயலாளர் என்ற முறையிலும் கிளிநொச்சி குடியேற்றத்திட்ட அபிவிருத்தியில் பெரும்பங்காற்றினார். நிரந்தரக் காரியதரிசியாகப் பணியாற்றியதையடுத்து அவர் பொதுச்சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

அவரது சிறந்த பணிகளைப் பாராட்டும் விதத்தில் பிரிட்டிஷ் மகாராணியின் ஓ. பி. ஈ பட்டம் வழங்கப்பட்டது.

சமயத்துறையிலும் அவர் அளப்பரிய விதத்தில் பணியாற்றியுள்ளார். யோகசுவாமியின் சிறந்தசீடர், சிவதொண்டன் நிலையத்தின் தலைவராகப் பலகாலம் பணியாற்றினார். நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவல் குழுவின் தலைவராக ஐந்து ஆண்டுகள் இருந்துள்ளார். நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருப்பணிச் சபைத் தலைவராகவும் இருந்துள்ளார். காலமாகையில் ஆறுமுகநாவலர் சபை பொதுச் செயலாளராகவும், சுதுமலை அம்மன் ஆலய அறங்காவல் சபைத்தலைவராகவும், சேர் பொன்னம்பலம் ராமநாதன் நம்பிக்கை நிதியத்தின் பொருளாளராகவும் இருந்தார்.

அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தை அவரே ஆரம்பித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கவுன்சில் உறுப்பினராக அண்மையில் மீண்டும்நியமிக்கப்பட்டார். அவர் மறைவால் யாழ்ப்பாணம் சிறந்த பெரியாரை இழந்துள்ளது.

திரு. ஸ்ரீகாந்தாவின் அந்திமக் கிரியைகள் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மயானத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அஞ்சலி

சேர் பி. அருணாசலத்திற்குப் பின் ஒரு தமிழ் பெரியாரை, ஒரு சைவ சீலனை, தமிழ்மக்கள் இழந்துவிட்டனர். இவர் நியமனம் பெறாத ஸ்தாபனங்கள் ஈழத்தில் இல்லை. இவரது ஆத்மா சாந்தியடையட்டும்.

—ஜீ. ஜீ. லட்சுமி நாராயண சுவாமிஜீ

## அறிவித்தல்
## மின் தடை

இலங்கை மின்சார சபையினரால் சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால் 07-02-1982-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-00 மணியிலிருந்து மாலை 1.00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற எல்லைக்குள் மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சி. வி. கே.
சிவஞானம்
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி
மன்றம்.

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
05/02/1982. 2211

## இப்படியும் நடக்கிறது

மது என்ன எல்லாம் செய்யும்?

ரோகி லாமா என்பவன் ஒரு விவசாயி. அவனுக்கு வயது நாற்பது. நேபாளத்தின் தலைநகர் காத்மாண்டுவிலிருந்து நூற்று அறுபது கிலோமீட்டர் தூரத்தில் உள்ள தான்ஹோ எனும் மாவட்டத்தைச் சேர்ந்தவன்.

ஒருநாள் நிறைபோதையில் வீட்டுக்கு வந்த லாமா, முதலில் மனைவியிடம் நெருங்கி அவளைத் தீர்த்துக்கட்ட முயன்றான். கணவனின் 'பயங்கரம்' கண்டு அவள் தப்பிப்பிழைக்கவே லாமாவின் கொடூரக் கண்களுக்கு அவனது நான்கு வயது மகள் அகப்பட்டாள்!

வெறிபிடித்த லாமா, தனது மகளின் தலையை முதலில் வெட்டி வீசினான். பின்னர் தனது பிள்ளையின் சடலத்தின் பெரும் பகுதிகளைக் கத்தியினால் துண்டுதுண்டாக்கி, நெருப்பில் வாட்டி ருசித்துச் சாப்பிட்டான்!

இந்த விபரங்களை அவனே மாவட்ட நீதிமன்றமொன்றில் வெளியிட்டு 'குடி' யின் 'பெருமை'யை பறைசாற்றியுள்ளான்!

ஊடுருவி

## இன்று கலைவிழா

(புலோலி)

வியாபாரிமூலை மகளிர் கிராமாபிவிருத்தி சங்கத்தின் கலைவிழா இன்று பிற்பகல் சங்கத்தலைவி பி. கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறும். பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தலைவர் திரு. சிவராஜசிங்கம் பரிசில்களை வழங்குவார்.

## அமைச்சர் சிறில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூ. 75 லட்சம் செலவில் அமைந்த தூசுபோக்கியந்திரத்தை ஆரம்பித்து வைத்த அமைச்சர்எண்ணைக்காக நிலக்கரி பயன்படுத்தப்படும் கருவியையும் பார்வையிட்டுப் பின் தொழிற்சாலையின் மூன்றும் கட்ட வேலைத்தளத்துக்கும் விஜயம் செய்தார்.

இன்று அமைச்சர் மத்யூ தொழிற்சாலைத் துறைமுகத்துக்கு விஜயம் செய்து இறக்குமதி ஏற்றுமதி வேலைகளை ஆரம்பித்து வைப்பார்.

## விடுபட்ட டிக்கட் விபரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 21ம் திகதி வெளியிடப்பட்ட மகாபொல சுவீப் முடிவுகளில் ஆறுதல் பரிசுபெற்ற 100டிக்கட்டுகளில் 99 டிக்கட்டுகளின் விபரம் மட்டுமே பிரசுரமாகியிருந்தன. விடுபட்ட டிக்கட்டின் விபரம் கீழேதரப்படுகின்றது.

**160 R 0606**

## இலங்கை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதி திரு. நீலம் சஞ்சீவரெட்டியும், இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் தியவதன நிலமேயும், நீதியமைச்சருமான கலாநிதி நிஸங்கா விஜயரத்னாவினால் மல்லிகை மலர்நிறைந்த தாம்பாளங்களினால்வரவேற்கப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்து இந்திய ஜனாதிபதி தலதா மாளிகையிலுள்ள புனித தந்தத்தையும் தரிசித்தார், பின்னர் இவர் இங்குள்ள எண்கோண மண்டபத்திற்கும் விஜயம்செய்தார். (வெ)

## மரண அறிவித்தல்
### நாகம்மா வைரமுத்து

நாகம்மா வைரமுத்து காலமானார். இவர் கா. வைரமுத்துவின் (இளைப்பாறிய உப அதிபர், யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம்) அன்பு மனைவியும், விக்னேஸ்வரி (யு. கே), சம்புநாதன் (நிறைவேற்றுப் பொறியியலாளர், பெருந்தெருக்கள் திணைக்களம், நுவரெலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருச்செல்வம் (யு. கே), தேவரஞ்சினி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் காங்கேசன்துறை வீதி 658/14 இலக்க ''ஈஸ்வரிவாசா'' இல்லத்திலிருந்து இன்று சனிக்கிழமை காலை 9—00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். (2212)

## மரண அறிவித்தல்
### ம. ஸ்ரீகாந்தா C. C. S., O. B. E.

இளைப்பாறிய அரசாங்க அதிபரும், காணி நீர்ப்பாசன இலாக்கா நிரந்தரக் காரியதரிசியுமான மயில்வாகனம் ஸ்ரீகாந்தா காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மாலினி (New Zealand), யோகி (Accountant, Papuwa New Guinea), Captain ஜனகன் (Air Port Authority) ஆகியோரின் அருமைத் தந்தையும், Dector இராசநாயகம் (New Zealand), சித்ரா பத்மாவின் மாமனுமாவார். அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (7—2—82) பிற்பகல் 4—00 மணிக்கு ஸ்ரீமனை, பலாலி வீதி, கோண்டாவிலிலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

2206

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.